# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.109/2025

**Deposition of Witness for Prosecution PW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மகாலெட்சுமி | Husband's Name | : | விஜய் |
| Village | : | பெருமாளகரம் | Taluk | : | கொரடாச்சேரி |
| Calling | : | | Age | : | 28 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 16th day of December 2025.**

**(A1 & A2 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது பெருமாளகரத்தில் வசித்து வருகிறேன். நான் இல்லதரசியாக இருக்கிறேன். என் மாமனார், மாமியார், கணவருடன் கூட்டு குடும்பமாக வசித்து வருகிறோம். என் கொழுந்தனார் தினேஷ் என் வீட்டிற்கு பக்கத்தில் வசித்து வருகிறார். ஆஜர் எதிரிகளை தெரியும். 03.10.2018 ம் தேதி நான் என் வீட்டிலிருந்தபோது எதிரிகள் இருவரும் மோட்டார் சைக்கிளில் வந்து என் கணவர் விஜய் எங்கே என கேட்டார்கள். நானும் என் மாமனார் பாஸ்கரும் வீட்டிலிருந்தோம், அப்போது இரவு 10.30

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.16 14:57:28 +0530

மணியிருக்கும். என் வீட்டுக்காரர் இல்லை வெளியில் போய்விட்டார் என சொன்னோம். உடனே எதிரிகள் இருவரும் என் கணவர் விஜயை தேடுவதாக என் கொழுந்தனார் தினேஷிற்கு தகவல் தெரிவித்தோம். அங்கு வந்த தினேஷ், எதிரிகள் முத்துக்குமார், ஜெயராஜ் இருவரிடமும் ஏன் தேவையில்லாமல் பிரச்சனை செய்கிறீர்கள் என கேட்டார். விஜய் வந்தவுடன் பேசிக் கொள்ளலாம் என சொன்னார். முத்துக்குமாரும் ஜெயராஜும் குச்சிகாரி, தேவடியா மகனே என கெட்ட வார்த்தைகளால் திட்டி முத்துக்குமார் மோட்டார் சைக்கிளில் வைத்திருந்த அருவாளை எடுத்து வந்து இதோடு தொலைந்துபோடா என சொல்லி என் கொழுந்தனார் தினேஷின் தலையில் அருவாளால் வெட்டினார். என் கொழுந்தனார் தினேஷின் தலையில் இரத்தம் வந்தது. மீண்டும் வெட்டும்போது அந்த வெட்டு என் கொழுந்தனாரின் இடது கை கட்டை விரலில் விழுந்தது. அவருடன் வந்த ஜெயராஜ் (எ) சின்னபிள்ளை பீர் பாட்டிலால் என் கொழுந்தனாரின் வலது தோள் பட்டை, வலது கை மணிக்கட்டு ஆகிய இடங்களில் அடித்ததில் என் கொழுந்தனார் கீழே விழுந்து விட்டார். நானும் தீபிகாவும் சத்தம் போட்டோம். பக்கத்து வீட்டை சேர்ந்த வெங்கடேசன் ஓடிவர என்னைக்கு இருந்தாலும் உன்னையும் விஜயையும் விடமாட்டேன் என சொல்லி அருவாளையும் பாட்டிலையும் காட்டி மிரட்டிவிட்டு இருவரும் ஓடிவிட்டார்கள். இரத்தக்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.16 14:57:34 +0530

காயம் பட்ட தினேஷை திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

தற்சமயம் இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.16 14:57:40 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.109/2025

**Deposition of Witness for Prosecution PW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாஸ்கர் | Father's Name | : | கலியமூர்த்தி |
| Village | : | பெருமாளகரம் | Taluk | : | கொரடாச்சேரி |
| Calling | : | | Age | : | 65 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 16th day of December 2025.**

**(A1 & A2 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது பெருமாளகரத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் மருமகள். ஆஜர் எதிரிகளை தெரியும். எனக்கு விஜய், தினேஷ் என்ற 2 மகன்கள் உள்ளார்கள். என் மகன் விஜய் மற்றும் மருமகளுடன் கூட்டு குடும்பமாக வசித்து வருகிறேன். என் மகன் தினேஷ் என் வீட்டிற்கு பக்கத்தில் வசித்து வருகிறார். 03.10.2018 ம் தேதி நான் என் வீட்டிலிருந்தபோது எதிரிகள் இருவரும் மோட்டார் சைக்கிளில் வந்து என் மகன் விஜய் எங்கே என கேட்டார்கள். நானும் என்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.16 14:57:46 +0530

மருமகள் மகாலெட்சுமியும் வீட்டிலிருந்தோம், அப்போது இரவு 10.30 மணியிருக்கும். என் மகன் இல்லை வெளியில் போய்விட்டான் என சொன்னோம். உடனே எதிரிகள் இருவரும் என் மகன் விஜயை தேடுவதாக தினேஷிற்கு என் மருமகள் தகவல் தெரிவித்தார். அங்கு வந்த தினேஷ், எதிரிகள் முத்துக்குமார், ஜெயராஜ் இருவரிடமும் ஏன் தேவையில்லாமல் பிரச்சனை செய்கிறீர்கள் என கேட்டார். விஜய் வந்தவுடன் பேசிக் கொள்ளலாம் என சொன்னார். முத்துக்குமாரும் ஜெயராஜும் குச்சிகாரி, தேவடியா மகனே என கெட்ட வார்த்தைகளால் திட்டி முத்துக்குமார் மோட்டார் சைக்கிளில் வைத்திருந்த அருவாளை எடுத்து வந்து இதோடு தொலைந்துபோடா என சொல்லி தினேஷின் தலையில் அருவாளால் வெட்டினார். தினேஷின் தலையில் இரத்தம் வந்தது. மீண்டும் வெட்டும்போது அந்த வெட்டு தினேஷின் இடது கை கட்டை விரலில் விழுந்தது. அவருடன் வந்த ஜெயராஜ் (எ) சின்னபிள்ளை பீர் பாட்டிலால் தினேஷின் வலது தோள் பட்டை, வலது கை மணிக்கட்டு ஆகிய இடங்களில் அடித்ததில் தினேஷ் கீழே விழுந்து விட்டான். என் மருமகள்கள் மகாலெட்சுமியும் தீபிகாவும் சத்தம் போட்டார்கள். பக்கத்து வீட்டை சேர்ந்த வெங்கடேசன் ஓடிவர என்னைக்கு இருந்தாலும் உன்னையும் விஜயையும் விடமாட்டேன் என சொல்லி அருவாளையும் பாட்டிலையும்

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.16 14:57:52 +0530

காட்டி மிரட்டிவிட்டு இருவரும் ஓடிவிட்டார்கள். இரத்தக் காயம் பட்ட தினேஷை திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார்கள். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

தற்சமயம் இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.12.16 14:57:58 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.